Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# புறநானூற்றில் குடியிருப்புகளும் அதன் அமைப்புகளும்

**முனைவர் இரா.ஜீவாராணி, உதவிப் பேராசிரியர்,**
**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.**
**மின்னஞ்சல் – jeevarani2408@gmail.com**

36

**ஆய்வுச்சுருக்கம்**

குகைகளில் வாழ்ந்த மனிதன் காலப்போக்கில் குகைகள் போன்ற தோற்றத்தைக் கொண்டு குடிசைகள் அமைக்க ஆரம்பித்தான். இவ்வாறு பலவிதமான குடிசைகளை இருப்பிடங்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டு அவற்றில் பல மாற்றங்களைச் செய்ய ஆம்பித்தான். புறநானூற்று காலத்தில் குடியிருப்புகள் குரம்பை, , கூரை வீடுகள், மனை, சிறுமனை, நெற்கதிர் கூரை, மாடி வீடுகள், சிற்றில்,பேரில் என்று மாற்றம் பெற்று வளர்ச்சி பெறத் தொடங்கின.

**திறவுச் சொற்கள்**

குரம்பை - கூரை வீடுகள் – மனை – சிறுமனை - நெற்கதிர் கூரை - மாடி வீடுகள் – சிற்றில் - பேரில்

**முன்னுரை**

மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் இன்றியமையாத ஒன்றாகும். மனிதன் முதலில் நாடோடியாகத் திரிந்து பின்னர் ஒரே இடத்தில் வாழத் தொடங்கினான். குகைகளில் வாழ்ந்த மனிதன் அதன் பின் குகைகள் போன்ற தோற்றத்தைக் கொண்டு குடிசைகள் அமைக்க ஆரம்பித்தான். இவ்வாறு பலவிதமான குடிசைகளை இருப்பிடங்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டு அவற்றில் பல மாற்றங்களைச் செய்ய ஆம்பித்தான். அதனைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**குரம்பை**

குரம்பை என்பதற்கு "சிறுகுடில் ; பறவைக் கூடு ; உடல் ; தானியக் கூடு ; சேர் ; பத்தாயம் ; இசைவகை "[1] என்று தமிழ் –தமிழ் அகராதி பொருள் தருகிறது.

குரம்பை வீடு என்பது கூரை வீடு ஆகும். வீடுகளின் மேற்கூரைகள் பல்வேறு பொருட்களினால் வேயப்பட்டிருக்கும். இவ்வீடுகள் ஏழை, எளியவர்கள் வாழும் வீடுகளாக இருக்கும். பண்டைய தமிழகத்தில் ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் அந்த நிலங்களில் கிடைக்கும் குரம்பைகளுக்கேற்ப வீடுகளின் கூரைகளை வேய்ந்தார்கள்.

**தேறலைப் புல் குரம்பை**

குரம்பை எனப்படுவது சிறிய மனையைக் குறிக்கும். குரம்பைகள் என்பது கூரை வேய்ந்த குடிசைகளாகும். தேறலைப் புல் என்னும் புல்லினால் வேய்ந்த குரம்பை கட்டப்பட்டிருந்ததை,

"நிலம் புதைப் பழுனிய மட்டின் தேறல்

புல்வேய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து" (புறம்-120: 12-13)

என்ற அடிகளின் வாயிலாக, தேறலைப் புல்லால் வீட்டின் கூரை வேய்ந்த பாங்கினை அறிந்து கொள்ள முடிகிறது.

**புல்**

புல்லால் வேயப்பட்ட சிறிய குடிசையினை புல்வேய் குரம்பை என்றனர். இதனை,

"புல் வேய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து" புறம் (120 13)

என்ற அடியின் வாயிலாக, அறிந்து கொள்ள முடிகிறது.

**மனை**

முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கான கட்டமைப்பில் அமைந்த குடியிருப்புகளை மனை என்று புறநானூறு சுட்டுகின்றது. இதனை,

"திருவுடைத் திருமனை ஐது தோன்று கமழ் புகை
வருமழை மங்குலின் மறுகுடன் மறைக்கும்
குறும்பு அடு குண்டு அகழ் நீள் மதில் ஊரே" (புறம்.379:16-18)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியமுடிகிறது.

**கூவையிலையால் வேயப்பட்ட பந்தல் (சிறு மனை)**

கூவையிலையால் வேயப்பட்ட நாற்கால் பந்தலாலான சிறுமனை என்ற செய்தியால் அக்கால கட்டிடக் கலையின் தொழில் நுட்பத்தினை,

"கூவை தூற்ற நாற்கால் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையின் ஓரி வருநர்க்கு"(புறம்-29:19-20)

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**தூண்கள் உடைய மன்றமும் மனையும்**

நிலை தளர்ந்து பாழ்பட்ட நிலையில் நின்று கொண்டிருக்கும் பல தூண்களையுடைய மன்றம் இருந்ததை,

"அலங்குகதிர் சுமந்த கலங்கற் சூழி
நிலைதளர்வு தொலைந்த ஒல்கு நிலைப் பல்காற்
பொதியில் ஒருசிறை பள்ளியாக" (புறம்-375:1-3)

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. . மேலும்,

"சிற்றில் நற்றூண் பற்றி பற்றி (புறம். 86 : 1)

"சுவை துற்ற நாற்காற் பந்தர்ச் சிறுமனை வாழ்க்கை (புறம்.29 : 19-20)

என்ற அடிகளின் வாயிலாகத் தூண் வைத்து இல்லம் கட்டும் பழக்கம் இருந்ததனையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**நெற்கதிர் கூரை**

நெற்கதிர்களைக் கூரையாக வேய்ந்து, கழிகளாகக் கரும்பைப் பயன்படுத்திய குடிலைப்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

புறநானூறு சுட்டுகிறது.

"அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த
ஆய் கரும்பின் கொடிக் கூரை,
சாறு கொண்ட களம் போல" : {புறநானூறு 22: 14-16}.

என்ற அடிகளின் வாயிலாக, `நெல்லோடு வேயப்பட்ட நெல்லந்தாள் கூரை வீடும், கருப்பஞ்சருகு வேய்ந்த கூரை வீடுகளும் தனித்தனியே விழாக் கொண்டாடப்பட்ட களம் போலப் பொலிவுடன் காட்சி தந்தன என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றன.

**சிற்றில்**

'சிற்றில்' என்பதற்கு சிறுகுடில், சிறுவீடு, சிறுமியர் கட்டி விளையாடும் மணல்வீடு, சிற்றில் பருவம் எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. சிறுவடிவமைப்பை யுடைய வீடுகளைச் சிற்றில் என இலக்கியங்கள் கூறுகின்றன. சிறுமிகள் மணலில் கட்டி விளையாடும் சிறுமணல் வீடும் என்று அழைக்கப்படுகிறது. இதனை,

"சிற்றில் நல் தூண்......................." (புறம்.56:1)

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

**பேரில்**

பெரிய அளவில் கட்டமைக்கப்பட்டிருந்த வீடு களைப் பேரில் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. குடியிருப்பதற்குரிய வீட்டின் உறுப்புகள் குலைந்து செல்களால் சிதைக்கப்பட்டிருந்தாலும் ஒழுகாத நிலையில் பெரிய அளவிலான வீடுகள் இருந்துள்ளன. இதனை,

"அந்தோ! எந்தை அடையாப் பேரில்" (புறம்.261:1)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

**மாடி வீடுகள்**

கரும்பாற் கட்டப்பட்டு செந்நெற்கதிர்களால் வேயப்பட்ட மாடி வீடுகள் இருந்ததனை,

"அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த
ஆய் கரும்பின் கொடிக் கூரை" (புறம்-22: 14-15)

என்ற பாடல் அடிகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

**கதவுகள்**

ஒடு மரத்தின் கோல்களால் அமைக்கப்பட்ட கட்டுக்கதவினையுடைய இல்லங்களின் முன்னர் வேட்டுவர் தீயைமூட்டி உடும்பை வாட்டுவர் என்பதனை,

"உடும்பு இழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச்
சீறில் முன்றில் கூறுசெய்திடுமார்" (புறம். 325)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மரக்கோல்கள் கொண்ட கதவு படலை என்று அக்காலத்தில் அழைக்கப்பெற இக்காலத்தில் அது படல் என்று அழைக்கப்படுகிறது.

**மரக்கால் பந்தல்**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

குடில்களுக்கு முன்னர் பந்தல் இருந்தது. அப்பந்தல் மரக்கால்களால் அமைக்கப்பட்டிருந்தது. குமிழம் பழங்களை உண்ட வெள்ளாடு துப்பிய விதைகள் பந்தலில் காணப்படும். அங்கு இடையன் தீயை மூட்டுவான் என்று கூறுகிறது. இதனை,

"குமிழ் உண்வெள்ளை பகுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய வண்காற் பந்தர்
இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்து" புறநானூறு (324)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

**பாசறை**

பாசறையும் மரக்கால்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. கூவையிலையால் மூடப்பட்டது. இதனை,

"கூவை துற்ற நாற்கால் பந்தர்" (புறம் 29 19)

என்ற அடியால் உணரலாம். மேற்கண்ட செய்திகளிலிருந்து குடில்களில் மரங்கள் கதவாகவும், கழியாகவும் பயன்பட்டதை அறிய முடிகிறது.

**முன்றில் அமைப்பும் அதன் பயன்பாடும்**

முன்றில் என்பது வீட்டின் முன்பகுதியாகும். முன்றில் பயன்பாடு பற்றிச் சிறப்பாக வாழ்விடச் சூழலுடன் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. குரம்பை, குடில், மனை, வீடு, அரண்மனை போன்ற குடியிருப்புகளின் கட்டமைப்பில் முன்றில் அமைப்பையும் அதன் பயன் பாட்டையும் புறநானூறு எடுத்தியம்புகின்றன.

**குறிஞ்சி நில முன்றில்**

குறிஞ்சி நிலக்குடியிருப்பு கட்டமைப்பில் முன்றில் அமைப்புகள் திறந்தவெளி இடமாகக் காணப்படுகின்றன. இவ்வமைப்பில் செடி கொடிகள் வளர்ந்து பந்தல் போல இருப்பதால் உறங்கி ஓய்வெடுப்பதற்குரிய இடமாக இருந்துள்ளது

குறிஞ்சி நிலமுன்றில் கட்டமைப்பின் பயன்பாட்டினை,

"குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுவினிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும்" (புறம்.129:1-3);

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. மேலும்,

குறிஞ்சி நிலத்தில் முற்றத்தில் கிளைகள்தோறும் பழங்கள் தொங்குகின்ற பலாமரங்கள் இருந்தன என்பதை

"மரைபிரித்து உண்ட நெல்லி வேலிப்,
பரலுடை முன்றில், அங்குடிச் சீறூர்" (புறம்.170)

என்ற அடிகளில் மரை மான்கள் நெல்லிக்காயைத் தின்று முற்றத்தில் பரப்பியதனை அறிந்து கொள்ள முடிகின்றன.

மேலும், வீட்டின் முற்றத்தில், முள்வேலிக்கு அருகில் பீர்க்கும், சுரையும் படர்ந்திருந்தன. இதனை,

முள்மிடை வேலி

பஞ்சி முன்றில் சிற்றில் ஆங்கண்

பீரை நாறிய சுரை இவர் மருங்கின்" புறநானூறு (116)

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

குறிஞ்சி நிலத்தில் முற்றத்தில் கிளைகள்தோறும் பழங்கள் தொங்குகின்ற பலாமரங்கள் இருந்தன என்பதை

"மரைபிரித்து உண்ட நெல்லி வேலிப்,

பரலுடை முன்றில், அங்குடிச் சீறூர்" (புறம்.170)

என்ற அடிகளில் மரை மான்கள் நெல்லிக்காயைத் தின்று முற்றத்தில் பரப்பியதனை அறிந்து கொள்ள முடிகின்றன.

**மான்கள்**

வேட்டுவரின் குடிசை முன்னால் மான்கள் கட்டப்பட்டதைப் புறநானூறும் கூறுகிறது. இதனை,

கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்,

பார்வை மடப்பிணை தழீஇப், பிறிதோர்

தீர்தொழில் தனிக்கலை திளைத்துவிளை யாட"(புறம்.320 – 3-5)

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**தூய்மையற்ற முற்றம்**

தூய்மை செய்யப்படாத முற்றத்தைப் பற்றியும் புறநானூறு கூறுகிறது. இதனை,

"மிடைந்த சீயா முன்றில்" (புறம் - 316)

என்ற அடியின் வாயிலாக, செத்தைகள் மிகுந்து, தூய்மை செய்யப்பெறாத முற்றத்தினைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

**முற்றத்தை மெழுகுதல்**

மனைவி தன் கணவன் விண்ணுலகு அடைந்தபின் அவனுக்கு உணவிட விரும்பி, தன் கண்ணீரும், பசுஞ்சாணமும் கொண்டு முற்றத்தில் முறம் அளவு மெழுகினாள்.

நீறாடு சுளகின் சீறிடம் நீக்கி,

அழுதல் ஆனாக் கண்ணள்,

மெழுகு, ஆப்பிகண் கலுழ்நீ ரானே. (புறம்.249 – 12-15)

என்ற அடிகளின் வாயிலாக, இறந்த கணவனுக்கு உணவு படைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது வரை முற்றம் இன்றியமையாத பங்கு வகிக்கும் இடமாக இருந்தது என்று உணரப்பெறுகின்றது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**முற்றத்தில் முஞ்ஞைக் கொடி, முசுண்டைக் கொடி**

வீட்டின் முற்றத்தில் முஞ்ஞைக் கொடியும், முசுண்டைக் கொடியும் வளர்ந்து, புதிதாகப் பந்தல் அமைக்க வேண்டாமல் அக்கொடிகளே பந்தல் போலக் காட்சியளித்த்து. பலரும் உறங்குவதற்கு அந்நிழல் பயன்பட்டது. இதனை,

"முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பி
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழல்" புறம்.320 – 1-2)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. பலரும் உறங்குவர் என்பதால் பெரிய பந்தல் போல் முஞ்ஞையும், முசுண்டையும் படர்ந்திருந்தது என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**வேலிகள்**

வீட்டின் முன் பாதுகாப்பிற்காக வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன.

1. **கழல் முள் வேலி**
2. **பருத்திச்செடி வேலி**

**கழல் முள் வேலி**

கழல் முள்ளால் ஆன வேலியை கழல் முள் வேலி என்று கூறுவர். இதனை,

"களிறுபொரக் கலங்கு, கழன்முள் வேலி" (புறம்.306 – 1)

என்று அடிகளின் வாயிலாக, கழல்முள் போன்றவற்றாலும் வேலியை அமைப்பர் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**பருத்திச்செடி வேலி**

புறநானூற்றுக் காலத்தில் பருத்திச்செடியும் வேலியாக இருந்துள்ளது.

"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்" (புறம்.299 – 1)

"பன்னல் வேலிஇப் பணைநல் லூரே" (புறம்.345 -20)

என்ற அடிகளின் வாயிலாகப் பருத்திச் செடியும் வேலியாக இருந்துள்ளதனை அறிய முடிகிறது.

**திண்ணை அமைப்பு**

தமிழரின் பண்பாட்டில் பழங்காலம் தொட்டு இன்றுவரை வீட்டமைப்பில் திண்ணை என்பது ஒரு இன்றியமையாதக் கட்டமைப்பாகக் காணப்படுகிறது. வீட்டின் முன்பகுதியில் மேடை போன்று அமைக்கப்படும் இடத்திற்குத் திண்ணை என்று பெயர். இதனை,

"தெற்றிப் பாவை திணி மணல் அயரும் (புறம்.283:1;;2)

என்ற பாடல் அடியின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**தொகுப்புரை**

- தேறலைப் புல் என்னும் புல்லினால் வேய்ந்த குரம்பை கட்டப்பட்டிருந்ததனை அறிய முடிகிறது.
- முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கான கட்டமைப்பில் அமைந்த குடியிருப்புகளை மனை என்று அழைத்தனர்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

- கூவையிலையால் வேயப்பட்ட நாற்கால் பந்தலாலான சிறுமனை என்ற அழைத்தனர்.
- பெரிய அளவில் கட்டமைக்கப்பட்டிருந்த வீடுகளைப் பேரில் என்றும், சிறிய அளவில் கட்டப்பட்டிருந்த வீடுகளைச் சிற்றில் என்றுமு அழைத்தனர்.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழ் தமிழ் அகர முதலி (தொ.ஆ)மு.சண்முகம்பிள்ளை,பக்.351

**பார்வை நூல்கள்**

1. மு.சண்முகம்பிள்ளை (தொ.ஆ.) - தமிழ் தமிழ் அகர முதலி தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை (பக்.351)
2. பாக்கிய மேரி.எ - காலந்தோறும் தமிழர் கலைகள், பூவேந்தர் வெளியீடு, சென்னை - 4. முதற்பதிப்பு -2005.
3. செந்துறை முத்து - தமிழர் நாகரிகமும் பண்பாடும், முதற்பதிப்பு - 1981.
4. தட்சணாமூர்த்தி.அ - தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, மேற்கு அண்ணாநகர், சென்னை - 600 040.
5. புலியூர்க்கேசியன் - புறநானூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம், சென்னை – 600 014. முதற்பதிப்பு, டிசம்பர2010